செய்தி வெளியீடு **நாள் : 28.6.2023**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் திறந்தவெளி ஒதுக்கீடு நிலங்கள் கணக்கீடு செய்வதற்கான இறுதிக்கட்ட தேதியை (Cut-off date) நிர்ணயிப்பது தொடர்பாகவும் மற்றும் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்று (28.6.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் திறந்தவெளி ஒதுக்கீடு நிலங்கள் கணக்கீடு செய்வதற்கான இறுதிக்கட்ட தேதியை (Cut-off date) நிர்ணயிப்பது தொடர்பாகவும், மாதவரம் மற்றும் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும், 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், முதன்மைச் செயல் அலுவலர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப. அவர்கள், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified © RealEstate™